செய்தி வெளியீடு எண். 121 நாள். 28.02.2018

# திருவள்ளூர் மாவட்டத்தில் தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்தவும், மேம்படுத்தவும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், தொழிற்கூடங்கள் அமைத்திட ஓர் அரிய வாய்ப்பு – மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் அறிவிப்பு

மாவட்டத்தில் தொழில் வளர்ச்சியினை விரைவுபடுத்திடவும், மேம்பாடு செய்திடவும் தற்போது குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான கொள்கைகள் எளிமையாக்கப்பட்டு தொழிற்கூடங்கள் நிறுவுவதில் ஏற்படும் அனைத்து இடர்பாடுகளையும் களைந்திட தமிழ்நாடு அரசு தொழில் வணிக வசதியாக்கல் சட்டம் மற்றும் விதிகள் (Business Facilitation Ordinace and Rules) என்ற சட்டத்தினை நிறைவேற்றி அதனை சீரிய முறையில் 12.01.2018-ல் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. மாவட்ட அளவிலான குழுவிற்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைவராகவும், பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம் அவர்கள் ஒருங்கிணைப்பாளராகவும் மற்றும் 13 உறுப்பினர்களை உள்ளடக்கிய 1. கண்காணிப்பு பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி பகிர்மான கழகம் 2. நகராட்சி மற்றும் ஊராட்சி துறை அலுவலகம், 3. துணை இயக்குநர், சுகதாரத்துறை 4. உதவி இயக்குநர், நகர் ஊரமைப்புத்துறை 5. மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், மாசு கட்டுப்பாட்டு வாரியம் 6. கோட்ட அலுவலர், தீயணைப்புத்துறை 7. உதவி இயக்குநர், நகர பஞ்சாயத்து உள்ளடக்கிய ஒருமுனை தீர்வுக்குழு அமைத்து ஒற்றை சாளர முறையில் அனைத்து வகையான உரிமங்கள் / மின் இணைப்புகள் / ஒப்புதல்கள் ஆகியவற்றை எவ்வித சிரமமுமின்றி விரைந்து வழங்கிட வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

இக்குழு வாயிலாக தொழிற்கூடங்கள் நிறுவுவதற்கு தேவையான அனைத்து வகையான உரிமங்கள் / மின் இணைப்புகள் / ஒப்புதல்கள் / தடையின்மை சான்றிதழ்கள் பெற்றுக் கொள்ள, தொழில் முனைவோர்கள் www.investingintamilnadu.com என்ற இணையதளத்தில் பார்வையிட்டு அதில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிமுறைகள் / அறிவுரைகள் ஆகியவற்றை பின்பற்றி உரிய ஆவண விபரங்களுடன் இணைய தளம் வழியாக விண்ணப்பிக்கும்பட்சத்தில் ஏற்புடைய அரசுத்துறைகள் / நிறுவனங்கள் ஆகியவற்றை முழுமையாக பரிசீலித்து உரிய காலவரையறைக்குள் தேவையான ஆணைகளை பிறப்பிக்கும். அவ்வாறு உரிய காலவரையறைக்கள் ஆணைகள் பிறப்பிக்கப்படவில்லை எனில் அத்தகைய விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டதாக கருதப் பெறும்.

இந்த குழு 15 நாட்களுக்கு ஒரு முறை கூட்டப்பட்டு தொழில் தொடங்கிட கட்டட வரைபட உடனடி அனுமதி வழங்க ஏற்பாடு செய்யப்படும். எனவே, நமது மாவட்டத்தில் தொழில் தொடங்க விருப்பம் உள்ளவர்கள் கட்டட வரைபட அனுமதி பெற தனித்தனியே பல்வேறு துறைகளுக்கு செல்லாமல் நேரடியாக மேற்கண்ட இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கவும், மேலும் விபரங்களுக்கு, பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், காக்களூர் தொழிற்பேட்டை, திருவள்ளூர் அவர்களை நேரிலோ அல்லது தொலைபேசி மூலமாகவோ (044-27666787) தொடர்பு கொண்டு பயனடையுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**